SRI RAMACHANDRA
INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH
(Category - I Deemed to be University) Porur, Chennai
Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in
NEWS RELEASE

சென்னை, 21 ஜூன் 2026

# ஸ்ரீ இராமச்சந்திராவில் மருந்தாக்கியல் மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு மாநாடு

- 2200க்கும் மேற்பட்ட மருந்தாக்கியல் துறை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ இராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மருந்தாக்கியல் துறையும் இந்திய மருந்தியல் ஆசிரியர்கள் சங்கத்தின் தமிழ்நாட்டு கிளையும் இணைந்து ஏற்பாடு செய்த தேசிய அளவிலான மாநாடு போரூர் ஸ்ரீ இராமச்சந்திராவில் நடைபெற்றது. மருந்தாக்கியல் துறை கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்முறை நிபுணர்கள் மாணவர்களின் புத்தாக்கல் திறன் மேம்பாடு, ஆராய்ச்சிக்கு ஊக்குவித்தல் மற்றும் தொழில் முனைவு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தனர்.

மாநாட்டைத் தொடக்கி வைத்து பேசிய தமிழ்நாடு மாநில மருந்தியல் கவுன்சில் மற்றும் இந்திய மருந்து உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் Dr. ஜெ. ஜெயசீலன், இந்தியா உலகின் 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு மருந்து பொருட்களை ஏற்றுமதி செய்கிறது. மருந்து உற்பத்தித் துறையில் இந்தியா உயர்ந்த நிலையை எட்டியிருந்தாலும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் படைப்புகளில் இன்னும் முன்னேற்றம் தேவைப்படுவதாக தெரிவித்தார். புத்தாக்கல் சிந்தனை, சிறந்த படைப்பாற்றல், அறிவியல் மற்றும் கூர்மையான அறிவுத்திறன் ஆகியவை ஆராய்ச்சியை முன்னெடுக்க உதவுகின்றன. வலுவான ஆராய்ச்சி அடித்தளமும் புத்தாக்கல் திறனும் இருந்தால் ஒருவர் சிறந்த தொழில் முனைவோராக உருவாக முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

மாநாட்டில் தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரபிரதேசம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட கல்லூரிகளிலிருந்து 2200 மருந்தாக்கியல் துறை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பல்வேறு தலைப்புகளில் மேற்கொண்ட ஆராய்ச்சி விளக்கவுரைகள் மற்றும் பதிப்புரைகளை வெளியிட்டனர். மாணவர்கள் மருந்தாக்கியல் துறையில் தங்களின் புத்தாக்கல் ஆராய்ச்சி தலைப்புகளை எடுத்துக்காட்டுடன் விளக்கி காட்டினர். சுமார் 400 அறிவியல் ஆய்வுகள் வாய்மொழி மற்றும் சுவரொட்டிகள் வெளியிடப்பட்டன.

மருந்து தொழில் துறையை சேர்ந்த முன்னணி நிபுணர்களான Dr. பிரகாஷ் முத்துதாஸ், Dr. L. ராமநாதன், திரு. நாகார்ஜூனா ரெட்டி ஆகியோர் மாநாட்டின் அறிவியல் அமர்வுகளில் கலந்து கொண்டு ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு துறையின் முன்னேற்றங்கள் மற்றும் மருத்துவ உபகரண பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடைமுறைகள் குறித்த கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் சிறந்த ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கப்பட்டது. அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் முன்னாள் மருந்தாக்கியல் துறை பேராசிரியர் K. கண்ணன் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் துணைவேந்தர் Dr. உமாசேகர் மாநாட்டு சிறப்பிதழை வெளியிட்டார். பதிவாளர் Dr. S. செந்தில்குமார், இந்திய மருந்தியல் ஆசிரியர்கள் சங்கத்தின் தமிழ்நாட்டு கிளையின் தலைவர் Dr. V. சங்கர், தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை உறுப்பினர் செயலாளர் Dr. S. வின்செண்ட், ஸ்ரீ இராமச்சந்திரா மருந்தாக்கியல் துறை தலைவர் Dr. K. சுஜாதா, மருந்தாக்கியல் துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

………..

Issued by ….Mr. D. Sivagnanavel, Head-Media & Corporate Relations, SRIHER, 9444 448616.
Ms. P. Kavitha, Sr. Executive, Media Relations, SRIHER, 9444066154.